RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s712

# தப்பாட்டம் நாவலில் விளிம்புநிலை மக்கள்

சோ. டோனிஷா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, தொலையாவட்டம்-629157, தமிழ்நாடு, இந்தியா.

# Marginalized People in the Novel 'Tappaattam' (The Wrong Play)

S. Donisha [a, *]

[a] Department of Tamil, Annai Velankanni College, Tholayavattam-629157, Tamil Nadu, India

* Corresponding Author: maludoni12061998@gmail.com

Received: 01-01-2022
Revised: 16-04-2022
Accepted: 28-04-2022
Published: 13-07-2022

Check for updates

**ABSTRACT**

Novel literature is one of the literary genres that has a special place in Tamil literature. The novel was created to point out the quality of life of the people in society. Solai Sundara Perumal is one of the best creators in today's fictional world. In his novel Tappaattam, he documented the biographies of marginalized people who are oppressed in society. The people of Pariyar, Pallar, and Sakiliya are portrayed as enslaved by the ruling class due to their economic status and caste status. From time immemorial, the novel depicts the frustrations, struggles, and desires of the people who have sacrificed their lives as slave laborers for imperialism and are living their lives without fulfilling any desires. People who live under the laws of the ruling class are subjected to various hardships due to birth. Due to such caste differences, the life struggles of the marginalized people have caused them great stress.

**Keywords:** Tappaattam, Marginalized People, Struggle, Caste Differences

## முன்னுரை

இலக்கியங்கள் காலத்தையும், இடத்தின் சூழலையும், கருத்துக்களையும், கற்பனையுடன் உணருமாறு எழுதப்பட்டுள்ளன. வாழ்க்கையில் மனிதர்கள் கண்ட ஆழ்ந்த அனுபவங்களையும், பொருண்மைகளையும் வெளிக்கொணர்ந்து வரும் இலக்கியங்களில், வாழ்வியல் கூறுகள் விரவிக் காணப்படுகின்றன. விளிம்பு நிலை மக்களைப் பற்றி எழுதப்படுவது தலித் இலக்கியங்களாகும். அம்மக்களின் வாழ்வினை வெளிக்கொணர்ந்து, அவர்கள் முழு விடுதலைப் பெற்ற மனிதர்களாக வாழ வேண்டும் என்னும் நோக்கில் இவ்விலக்கியம் படைக்கப்படுகிறது. இவ்விலக்கிய வகையில் எழுந்த புதினமே 'தப்பாட்டம்'. சோலை சுந்தரபெருமாள் தனது நாவலில், விளிம்பு நிலை மக்களைப் பதிவுசெய்துள்ளார். சமூகத்தில் விளிம்பு நிலையினராக வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் நிலையை விரிவாக இக்கட்டுரை ஆராய்கிறது.

## விளிம்புநிலை- வரையறை

'விளிம்பு நிலை' என்ற சொல் இலக்கியப் படைப் பாளர்களிடையே அதிகமாகப் பேசப்படுகின்ற, எழுதப்படுகின்ற ஒன்று. இதனை 'மையம்', 'ஓரம்' என இருவகைப்படுத்தலாம். சாதியினாலும், சமயத்தினாலும், பொருளாதாரத்தினாலும் மற்றும் தொழிலினாலும் முன்னேற முடியாமல், மேல்தட்டு மக்களால் தாழ்த்தப்படுபவர்களாகக் கருதப்படுகின்ற மக்களைக் குறிப்பதற்கே 'விளிம்புநிலை' என்ற சொல் பெரும்பாலும் பயன்படுகிறது.

விளிம்பு நிலை மக்கள் என்று குறிப்பிடப்படும் மக்கள் சமூகத்தில் எந்த விதமான உரிமையும் இல்லாதவர்கள். தங்களது உரிமைக்காகப் போராடுபவர்கள். இம்மக்கள் தங்களின் உரிமையை மீட்டெடுக்கப் போராடும் முறையை 'தப்பாட்டம்' நாவலில் படம் பிடித்துக் காட்டியுள்ளார் (Solai Sundaraperumal, 2002).

"விளிம்பு நிலையிலிருந்து மைய நீரோட்டத்திற்குள் (Main Stream) நுழைவது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. மையம் என்பது உயர் சாதியினருக்கும் உயர்ந்த வர்க்கத்தாருக்கும் ஆனதாக அவர்களாலேயே கட்டமைக்கப்பட்டுள்ளதாகும்" என்று, 'ஒடுக்கப்பட்டோர் அரங்கியல்' என்ற நூலில், விளிம்புநிலை மக்கள் எவ்வளவு முயன்றாலும், அவர்களால் எளிதில் உயர்ந்த வர்க்கத்தினருக்கு சமமாக வாழ்க்கை நடத்த இயலாது என்று குறிப்பிட்டுள்ளார் (Gunasekaran, 2015).

## தப்பாட்டம் நாவலில் சாதி அமைப்பு

ரிக்வேதம், மனுதர்மம், பகவத்கீதை ஆகியவை சாதியை இறைவனால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு என்று வலியுறுத்துகின்றன. அதன் பின்பு, மக்களின் பிறப்பினடிப்படையிலும், செய்கின்ற தொழிலின் அடிப்படையிலும் சாதிப்பிரிவு அமைந்தது. பல்வேறு இடங்களில் வாழ்கின்ற மக்களும், பல்வேறு மொழிகள் பேசும் மக்களும் கூடி வாழ்ந்த போது, சாதிகள் தோற்றம் பெற்றன என்ற கருத்தும் மக்களிடையே நிலவுகிறது. தப்பாட்டம் நாவலில் அம்பலகாரத்தெரு, மூப்பனார்தெரு ஆகிய தெருக்களில் வாழ்கின்ற மக்கள் மேல்வர்க்கத்தினராகவும், பறையர், பள்ளர் மற்றும் சக்கிலியச் சாதியைச் சேர்ந்த மக்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர்.

## குடியிருப்பு முறை

விளிம்பு நிலை மக்களின் குடியிருப்பு முறையானது வேறுபட்டுக் காணப்படுகிறது. ஒரு ஊரின் ஒதுக்குப்புறமான இடங்களில் தங்களது குடிசைகளை அமைத்து வாழ்க்கை நடத்துகின்றனர். இதனை "தலித் மக்கள் கிராமங்களில் வாழ்கின்ற போதும் கிராமம் என்பது வேறாகவும், சேரி என்பது வேறாகவும் தனித்து வைக்கப்பட்டுள்ள 'வெளி'களிலே வாழ்கின்றனர்" என்று ஒடுக்கப்பட்டோர் அரங்கியல் நூல் குறிப்பிடுகிறது (Gunasekaran, 2015).

விளிம்புநிலை மக்கள் சேரி என்ற ஒதுக்குப்புறமான இடங்களிலேயே வாழ்ந்தாலும், தப்பாட்டம் நாவலில் குடியானத்தெருவானது சேரித் தெருவைச் சுற்றி அமைந்துள்ளது என்பதனை, "பொட்டிப் போல துண்டா வெட்டி வச்சது போல ரெட்டிப்பாளையத்து இந்த சேரித் தெருவ சுத்தி குடியானத்தெரு வளைச்சிப் போட்டிருக்கு. இந்த சேரித்தெருகாரவங்க யாரும் குடியானத் தெருகாரவங்க கண்ணுல படாம ஒரு ஈ எறும்புக் கூட நகர்ந்திட முடியாது" என்ற வரிகள் புலப்படுத்துகின்றன. நாவலில் தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்பு முறையானது எதார்த்த அழகியலோடு வெளிப்படுகிறது (Solai Sundaraperumal, 2002).

## தீண்டாமை

ஒரு மனிதனை இன்னொரு மனிதன் சமமாகக் கருதாமையைத் தீண்டாமை என்பர். ஆதிக்கச் சமூகத்தினரால் விளிம்பு நிலை மக்கள் தீண்டாமைக்கு உட்படுத்தப்படுகின்றனர். உடலாலும், உள்ளத்தாலும் பாதிப்புக்குள்ளாகி, அனுபவித்த தீண்டாமைகள் பல. சாதியின் பெயரால் மட்டுமே இம்மக்களுக்கு கொடுமைகள் நடைபெற்று வருகின்றன. இதனை ஆசிரியர் நாவலில் பதிவு செய்துள்ளார்.

தங்களது உரிமைக்காகப் போராடிய மக்களிடம் சுந்தரமூர்த்தி வாத்தியார், "தீண்டாமை ஒழிப்பு போராட்டம்ங்கிறது அவ்வளவு லேசு இல்ல, பல தலைமுறைகளா, தாழ்த்தப்பட்டு, சுரண்டப்பட்டு, அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு கிடக்கிற சனங்களோட வாழ்வை மீட்டு எடுக்கப் போராடுற விஷயம்" என்று கூறி தீண்டாமைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார் (Solai Sundaraperumal, 2002).

சமூகத்தின் பொது விதிகளுக்குக் கட்டுப்படாதவர்களையும், விதிகளை மீறியவர்களையும் தண்டித்து ஒதுக்கி வைக்கும் செயல் தீண்டாமை எனப்படுகிறது. நாவலில் மற்றொரு இடத்தில் தீண்டாமைப் பற்றிய நிகழ்வு காணப்படுகிறது. அதாவது, இரட்டைக் குவளை முறை பின்பற்றப்பட்டு வந்தது. தேநீர் கடையில் செல்லும் பறையர், பள்ளர் மற்றும் சக்கிலியச் சாதியைச் சேர்ந்த மக்கள் தேநீர் அருந்த வேண்டுமானால், கடையின் ஓரத்திலுள்ள ஒரு துளை வழியாகவே வாங்க வேண்டும். கடையின் உள்ளே இருந்து டீ அருந்த அனுமதியில்லை, டீ அருந்திவிட்டு குவளையைக் கழுவி வைக்க வேண்டும். இவ்வாறு, உரிமைகள் மறுக்கப்பட்டு, தீண்டாமைக்கு உட்படுத்தியுள்ளனர் என்பது புலனாகிறது.

## பெண்ணிய ஒடுக்குமுறை

சாதியானது பெண் அடிமைத்தனத்துடன் தொடர்புடையதாகவும் இருக்கிறது. அடிமைப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உருவானதே பெண்ணியம். பெண் இயல்பாகவே ஆணைவிட ஆற்றல் பெற்றவள் என்றாலும் உடல்ரீதியாக வலிமையற்றவள் என்ற ஒரே காரணத்தின் பொருட்டு, ஆதிக்கச் சாதியினரால் விளிம்பு நிலை சாதி பெண்கள் ஒடுக்கப்பட்டனர். விளிம்பு நிலை மக்களிலும் ஆண்களை விட பெண்கள் அதிக அளவில் ஒடுக்குதல்களுக்கு ஆளாகின்றனர்.

நாவலில், தேநீர் கடையில் பெண்களுக்கு தனியாக தேநீர் குவளை வைக்கப்பட்டிருந்தது. அந்தக் குவளை தூய்மை இல்லாமல், பச்சை நிறத்தில் பாசி பிடித்துக் காணப்பட்டது. இதனை, “அந்த ஆளு டீ வாங்கிக்கிட்டு போற டமரா இப்படி பச்சைப் பாசிப் புடிச்சி கெடக்கு” என்னும் வரிகளினூடாக அறிந்து கொள்ள முடிகிறது (Solai Sundaraperumal, 2002).

விளிம்பு நிலையிலுள்ள பெண்கள் மஞ்சள் தேய்த்து குளிப்பதனைக் கண்ட மேல் வர்க்கத்தினர். அவர்களைக் கேலி செய்து ஒடுக்கும் நிகழ்வானது நாவலில் காணப்படுகிறது. இதனை,

“அம்பலகாரத்தெரு சின்னப்புள்ள வாயை கொப்புளிச்சி அண்ணி மூஞ்சில துப்பி, என்னாங்கடி, படித் தொறையில எறங்கி மஞ்ச தேச்சாத்தான் பறை செருக்கிகளுக்கு அடங்குதாடி? எங்க குளிச்சாலும் பறை செருக்கிய பறை செருக்கி தாண்டி. மஞ்ச குளிச்சா குடியானச்சியா ஆவமுடியாதுடி” என்ற வரிகளினூடாக தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண்கள் ஒடுக்குதல்களுக்கு உள்ளாகியதை அறிய முடிகிறது (Solai Sundaraperumal, 2002).

## மறுக்கப்பட்ட உரிமைகள்

விளிம்பு நிலை மக்களுக்கு ஆதிக்க வர்க்கத்தினரால் உரிமைகள் மறுக்கப்பட்டன, மறுக்கப்பட்ட உரிமைகளை மீறினால் கொடும் தண்டனை வழங்கப்படும் நிலை இருந்தது. நாவலில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கால்நடைகளை வளர்க்க உரிமை இல்லை. இதனை,

“பறையர் பள்ளர் சக்கிலியர் யாரும் வெள்ளாடு வளர்க்கக் கூடாது” என்னும் வரிகள் புலப்படுத்துகின்றன (Solai Sundaraperumal, 2002). நாவலில், அம்மனைச் சக்கிலியத் தெருவழியாக ஊர்வலமாகக் கொண்டு சென்றபோது அத்தெருவிலுள்ள வீடுகள் தீ பற்றி எரிந்தன. இதனை, ஆதிக்கச் சாதியினர், “சக்கிலியத் தீட்ட கோயிலுக்குள்ள போவ நம்ம அனுமதிச்சாலும் ஆயா அனுமதிக் கொடுப்பாளா? அதனாலத் தான் ஆயாவே தீயா பொங்கி வந்து சோதனைக் காட்டிட்டா” என்று கூறி, தாழ்த்தப்பட்ட சாதியினர் மீது பழி போட்டனர். இந்நிகழ்விலிருந்து விளிம்பு நிலையினருக்கு கோயில்களில் நுழையும் உரிமை மறுக்கப்பட்டது புலனாகிறது (Solai Sundaraperumal, 2002).

## ஊதியமின்மை

சமூகத்தில் மேல்தட்டு மக்களின் கீழ் வேலைச் செய்பவர்களுக்கு உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படாமலே இருக்கிறது. காலை முதல் மாலை வரை உழைத்தாலும் கூலி குறைவாகவே

உள்ளது. அதிலும் ஆண், பெண் என்று பார்த்தால், ஆண்களை விட பெண்களுக்கு மிகக் குறைவாகவே கொடுக்கப்பட்டது. இதனை, சோலை சுந்தர பெருமாள் தனது நாவலில் பதிவு செய்துள்ளார்.

முனியாண்டி சாம்பானின் பேத்தி விசாலாட்சியின் சடங்கு விழாவிற்குத் தீட்டு துணியை எடுக்க வந்த வீரவாகு புதர்வண்ணான் கூலியைக் கூட்டி கேட்டவுடன், நாட்டாமை, "இந்தாபாரு உங்களுக்கு முன்னப் போலவா காசு கொடுக்கிறோம் இந்தா! கொடுக்கிறத வாங்கிக்கிட்டு வாய் பேசாம போயி சேரு அடுத்து அடுத்து தேவை இருக்கு சேத்து வாங்கிக்கலாம்" என்று கூறி, குறைவாகவே ஊதியத்தை கொடுத்தார், என்பதிலிருந்து உழைக்கும் மக்களின் உழைப்பைச் சுரண்டிவிட்டு, உழைப்பிற்கேற்ற ஊதியமானது கொடுக்கப்படாமலே இருந்தது என்பது நன்கு புலப்படுகின்றது (Solai Sundaraperumal, 2002).

## அடக்குமுறைகள்

மேல்தட்டு மக்கள் கீழ்தட்டு மக்களை அடிமைப்படுத்திக் கொண்டே இருக்கும் சூழல் நிலவுகிறது. விளிம்பு நிலையினரை அடக்கினால் தான் அவர்கள் பொருளாதார நிலையில் வளர்ந்து முன்னுக்கு வரமாட்டார்கள் என்ற எண்ணத்தோடு அடக்குமுறையானது காலங்காலமாகப் பல்வேறு வடிவங்களில் பரிணமித்துக் கொண்டு வருகிறது. இதனை, "ஆதிக்க வர்க்கம் அண்டியவனை அடிமைப்படுத்தியே வாழும்" என்ற பாமாவின் கூற்றின் வாயிலாக நன்கு அறியமுடிகிறது (Bama, 2004).

நாவலில், முனியாண்டி சாம்பானின் தங்கை மகள் வெள்ளையை தங்கசாமி மூப்பனாரின் மகன் சீரழித்துக் கொன்றான். அதனை, நேரில் கண்ட தங்கசாமி மூப்பனார் தனது மகனைத் தண்டிக்காமல், தனது அதிகாரத்தினால், முனியாண்டி சாம்பானின் வாயினைமூடினார். "வெள்ளைச்சி சாவு பத்தி எங்கவும் மூச்சி பறியாம இரு. என்னோட ஆயுசு வரைக்கும் என்னோட பறையனா தான் நீயும் உன்னோட வாரிசுகளும் இருக்கணும். உன்னோட வாழ்விலேயும் சாவிலேயும் எனக்கு பங்கு இருக்குல்லடா. எகிறி நடக்க முயற்சிப் பண்ணுனே அப்புறம் முதல்லச் சொன்னது தான் நடக்கும்" என்னும் வரிகள், தவறு செய்பவர் உயர் சாதியினராக இருப்பதால், தாழ்ந்த சாதி மக்கள் தங்கள் நீதியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு அடக்கப்பட்டனர் என்பதற்கு தக்க சான்றாக அமைகிறது (Solai Sundaraperumal, 2002).

அடக்கு முறையானது பொருளாதார நிலையில் மட்டுமல்ல, கல்வி கற்கும் இடத்திலும் தொடர்கிறது. இதனை, "பறைப் பெயலுகளா எம்புட்டுத்திமுறாப் பேசுராம்னு பாருங்க இன்னைக்கு என்னமோ நாலெழுத்து படிச்சுட்டாம்னு இம்புட்டு சவுடாலப் போறான்" என்னும் வரிகளிலிருந்து விளிம்பு நிலையிலுள்ள ஒருவன் கல்வி கற்று, நல்ல நிலைக்கு வந்ததைப் பார்த்த ஆதிக்கச் சாதியினர் அவனை அடக்கும் விதமாக உள்ளது (Solai Sundaraperumal, 2002).

## முரண்பட்ட நிலை

முரண்பட்ட நிலை என்பது மறுத்தல் என்பதனைக் குறிக்கும். அம்பேத்கரின் அரிய முயற்சியினால் தலித் இன மக்கள் அடிமை விலங்கிலிருந்து அகற்றப்பட்டனர். அம்மக்கள், அவரைப் பின்பற்றி தங்களது வாழ்க்கை முறையினை மாற்றியமைத்தனர். ஆனால், நலிந்து வாழ்கின்ற தங்கள் இன மக்களை புறக்கணித்தனர். முன்னேற்றமடைந்த மக்கள் முன்னேற்றமடையாத தங்கள் இனமக்களிடமிருந்து விலகி வாழ முற்பட்டனர்.

சாதியினுள்ளே முரண்பட்ட நிலையைச் சோலை சுந்தர பெருமாள் தப்பாட்டம் நாவலில் கூறியுள்ளார். பறையர், பள்ளர் மற்றும் சக்கிலியச் சாதி மக்களின் ஓட்டுகளை வாங்கி, ஐந்து முறை பள்ளர்களின் பிரதிநிதியாக மாறினான் சாமாந்தவாய்க்காரன். அரசியலில் தொடர்பு ஏற்பட்டு செல்வந்தராகவும் மாறினான். தனது சாதியினரை விட்டு விலகி வேறு ஊரில் குடியேறினான் என்பதிலிருந்து, சாதியினுள்ளே முரண்பட்ட நிலை உள்ளது என்பது புலனாகிறது.

## கலை வடிவமான தப்பாட்டம்

தப்படிப்பது பறையர்களின் தொழில் என்று கூறுவர். பறை- பறையர்கள் நிகழ்த்தும் கலைவடிவம் என்னும் நிலைமாறி இன்று யார் வேண்டுமானாலும் நிகழ்த்தலாம் என்ற நிலைக்கு மாற்றம் பெற்றுள்ளது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்கள் தப்பாட்டத்தை விரும்பி கற்று, மேடைகளில் நிகழ்த்துகின்றனர். "பறை கொட்டுதல் என்பது முன்பெல்லாம் சாவுக்குப் பறை அடிக்கும் அடிமைச் செயலாக இருந்தது" என்பதிலிருந்து, சாவு நிகழ்வின் போது நிகழ்த்தும் கலையாக மட்டுமே பறையடிப்பது இருந்துள்ளது என்பது அறியமுடிகிறது (Solai Sundaraperumal, 2002). நாவலில், பறை கொட்டுதல் என்பது சாவுக்கான பறை என்ற நிலை மாறி, விளிம்பு நிலையினரின் போராட்டத்தின் முழக்க சின்னமாக மாற்றம் பெற்றுள்ளது என்பதனைச் சுந்தரமூர்த்தி வாத்தியார் "அடிமையா நின்னு தப்பு அடிக்கிறத ஒழிச்சாவனும்....... இது வரைக்கும் அடிச்ச தப்பையே ஒடுக்கப்பட்ட மக்களோட விடுதலை பேசுற போர்ப் பறையா......... அடிமைத்தொழிலாவும், இழிவு தொழிலாவும் வச்சிக்கிட்டு சில நிலவுடமைக்காரவங்க போடுற காசுக்காக பறையை ஏந்த விடாம கலையா மாத்தி தப்பாட்ட கலைஞர்களாக......"என்று கூறினார் (Solai Sundaraperumal, 2002). இதிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களின் தொழில் என்ற நிலை மாறி, சமூகத்தில் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி தப்பாட்டத்தைக் கலைவடிவமாக மாற்றினார், என்பது தெளிவாகிறது.

## ஆய்வுப் பயன்கள்

தப்பாட்டம் நாவலில், விளிம்புநிலை மக்களைப் பற்றி ஆய்வு செய்ததன் மூலமாக, விளிம்புநிலை மக்கள் எனக் கருதப்படுகின்ற பறையர், பள்ளர் மற்றும் சக்கிலியர் சாதி மக்களின் வாழ்வியலைப் பற்றிய நன்கு உணர்ந்து கொள்ளவும், இம்மக்களின் வாழ்வியல் சிக்கல்களைப் பற்றி புரிந்துக்கொள்ளவும், சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழ்கின்ற மக்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் இவ்வாய்வுக் கட்டுரைப் பயன்படுகிறது.

## முடிவுரை

விளிம்பு நிலை மக்களுடைய வாழ்வியலானது பல்வேறு சிக்கல்களை உள்ளடக்கியுள்ளது. இலக்கியங்களும் இதனை விரிவாகப் பதிவு செய்துள்ளன. விளிம்பு நிலையினரின் உழைப்பு மட்டுமே உயர் சாதியினருக்கு தேவைப்படுகிறது. சாதி அமைப்பு, பாகுபாடு, தீண்டாமை, ஒடுக்குமுறை, பாலின ஒடுக்குதல்கள் போன்ற பல்வேறு துயரங்களுக்கு விளிம்புநிலை மக்கள் உள்ளாகின்றனர். சோலை சுந்தரபெருமாள் தனது நாவலில் விளிம்பு நிலையினரின் வாழ்வியலை அழகாகப் பதிவு செய்துள்ளார். சாதி காரணமாகவே அடிமைப்படுத்தும் நிலை உருவாகிறது. இன்றைய சமூகத்திலும் பல்வேறு இடங்களில் விளிம்பு நிலையினருக்கு எதிரான பிரச்சனைகள் நடந்தேறிய வண்ணமே உள்ளன. தப்பாட்டம் நாவலின் வழி, விளிம்பு நிலை மக்கள் தங்கள் உரிமையைப் போராடி பெற்றுக் கொண்டமை புலப்படுகிறது.

## References

Bama, (2004) thalumbu kayangalai, Vidiyal Pathippagam, Coimbatore, India.

Gunasekaran, K.A., (2015) Odukkappattor Arangiyal, New Century Book House, Chennai, India.

Solai Sundaraperumal, (2002) Thappattam, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License